


உப்பாற்றில் உதித்து ஈச்சந்தீவில் வசித்து

உவர்மலையில் இறைவனடி எய்திய

# திருமதி பேச்சுமுத்து சுப்பிரமணியம்

## அவர்களின்

# 31ம் நாள் நினைவு மலர்

11.05.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை

அன்பின் திருவுருவாய் பண்பின்

உறைவிடமாய் பாசத்தின்

பிறப்பிடமாய் நாம் சான்றோராய்

வாழ வழிகாட்டி கல்வியூட்டி

எங்களை அன்புடன்

அரவணைத்து ஏற்றமுடன்

வாழவைத்த எங்கள்

அன்புத்தாய்க்கு

எமது காணிக்கை!

சாந்தி சாந்தி சாந்தி

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பு
25
-
06
-
1930



இறப்பு
11
-
04
-
2011

## அமரர்

# திருமதி.பேச்சுமுத்து சுப்பிரமணியம்

## திதிவெண்பா

பங்குனி இருபத்தேழு விகிர்தி வருடத்தில்
திங்கள் முன் நாளட்டமியில் – மங்களமாய்
தங்குமிடம் மாறி தான் போனாரங்கேயே
எங்கு மவர் எனும்படியாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பஞ்சபுராணம்







## தோத்திரப் பாடல்

திருச்சிற்றம்பலம்

### விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத் தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலியலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந்தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

தொல்லை இரும் பிறவி சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலா கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்குளிர
என் கண்கள் குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

உலகலாமுணர்ந்து ஓதுதற்கரியவன்
நிலவுலாவிய நிர்மலிவேணியன்
அலகிற் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழத்தி வணங்குவாம்.

# திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞான மொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடி யார்கள் வினை தீர்த்தமுகம் ஒன்றே
குன்றுருக வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகம் மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அம்மா!

தாமரைவில்லு எனும் தனித்தமிழ் கிராமத்திலிருந்து இரண்டாம் மகா யுத்தத்தின் போது இடம்பெயர்ந்து உருவான கிராமமே ஈச்சந்தீவு. தாமரைவில்லில் வசித்த கதிர்காமத்தம்பியின் கடைக்குட்டிதான் எங்கள் அப்பா சுப்பிரமணியம். உப்பாற்றில் வசித்த முருகப்பாவின் கடைசி மகள்தான் எங்கள் அம்மா பேச்சுமுத்து. தாய் தந்தையை இழந்திருந்த எங்கள் அப்பாவும், தாயை இழந்து தந்தையோடு மட்டும் வாழ்ந்த அம்மாவும் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார்கள். ஈச்சந்தீவில் காடு வெட்டி குடிலமைத்து புதுக்குடித்தனம் ஆரம்பித்தார்கள். கட்டுமட்டான வாழ்க்கையை ஆரம்பித்த வேளையில் 1944ல் மூத்த பிள்ளை பிறந்தது, அடுத்தடுத்து பிள்ளைகள் பிறக்கவே வாழ்கை பெரும் கஷ்டமாக அமைந்தது. சொல்லொணாத் துன்பங்களுடன் வாழ்ந்தார்கள். பசி, பட்டினியுடன் பிள்ளைகளை வளர்க்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலிருந்தார்கள். அப்பா சிறிது கல்வியறிவு பெற்றிருந்தாலும் அம்மா பள்ளிப் படிப்பின்றியே இருந்தார். எவ்வளவு கஷ்டம் வந்தாலும் பிள்ளைகளின் படிப்பிற்கே முதலிடம் கொடுத்தார்கள். பிள்ளைகளும் எவ்வளவு கஷ்டங்களிருந்தாலும் ஊக்கமுடன் படித்து ஓரளவு உன்னத நிலையை அடைந்தார்கள். பத்துப் பிள்ளைகளைப் பெற்று கட்டிக்காத்து வளர்த்த அன்புத்தாய்தான் எங்களம்மா.

1971 முதல் காலன் கைவைக்கத் தொடங்கினான், வாலிப வயதில் தர்மராசா காலமானாரர். 1986ம் ஆண்டு அப்புவைக் காலன் கடத்தினான். இல்லற வாழ்வில் இன்பமாய் வாழ்ந்திருந்த வேளையில் இன்பமலர் , ரஞ்சிதம் ஆகியோரும் முறையே 1989, 1990ம் ஆண்டுகளில் இறந்தனர். செல்வராசா, திருஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய இருவரும் 1990ம் ஆண்டில் மர்மமான முறையில் மறைந்தனர். இன்று தங்கத்துரை, புஸ்பவதி, இராமலிங்கம், மோகனசுந்தரம், லதா ஆகிய ஐவர் மட்டுமே எஞ்சியுள்ளோம்.

அம்மா கல்வியறிவு குறைவானவராயினும் பிள்ளைகளின் கல்விக்காக எவ்வளவோ சிரமப்பட்டார், துன்பப்பட்டார் , துவண்டு வாடினார். வயது வந்த பிள்ளைகள் ஓரளவு நல்ல நிலையிலிருந்த வேளையில் இறக்கும் போதும் , காணாமல் போகும் போதும் அம்மா பட்ட வேதனைகளைப் பார்க்கவும் முடியாது விபரிக்கவும் முடியாது. இறுதிப் பகுதியில் இளையபிள்ளை களிரண்டையும் தன் இரு கண்களைப் போலவே காத்து வந்தார் . அதில் ஒன்று 1990ல் காணாமல் போய்விட்டது அவர் தான் கிண்ணியா பிரதேச செயலகத்தில் லிகிதராக கடமையாற்றிய திருஞானம். இறுதிவரை தனது ஒற்றைக் கண்ணாக வளர்த்த இளைய மகளுடனிருந்து (லதா-ஆசிரியை) இனிதே விடைபெற்றுச் சென்றுள்ளார்.

1990 முதல் 1994 வரை ஊரவர் அனைவருடனும் கிளப்பன்பேக்- வெள்ளை மணல் அகதி முகாமில் அவதிப்பட்டது அவரது கஸ்டகாலத்தின் கதையாகும். 2001ம் ஆண்டில் வெருகல் கோயிலுக்கு செல்லும் வழியில் மகிந்தபுரம் தடை முகாமில் சண்டை மூளவே கூடச் சென்ற உறவினர் (மச்சாள்) இருவரையும் இழந்து அவர்களின் உடல்களுக்கு நடுவில் படுத்திருந்து தப்பி வந்த பயங்கர அனுபவமும் உடையவர். பொய் சொன்னியென்டா அறைஞ்சிடுவன் பல்லுக் களர. என்று மூத்த மகனையே எச்சரிக்கும் திறன் இந்த வயதில் எவருக்கும் இருக்கு மென்று எதிர்பார்க்கமுடியாது. தீர்மானங்கள் எடுப்பதில் மிகுந்த தீர்க்க தரிசியாகவும், தீர்மானித்ததை எவ்வகையிலும் செய்து முடிப்பதில் தீரம்மிக்கவராகவும் சிறந்து விளங்கினார். ஊரில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிப்பிள்ளைகளுக்கு மரத்தில் பழுத்த மாம்பழங்களை கொடுத்தனுப்புவார். இறுதிநாட்களில் கூட அம்மா அம்மா என்று இஸ்லாமியப் பிள்ளைகளும் வந்து போவது அன்னாரது எம்மதமும் சம்மதம் என்பதை கோடிட்டுக் காட்டுகின்றது.

தனது மகன் இலங்கையில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் ஐக்கியநாட்டு சபை மூலம் வேலை செய்தவர் என்ற பெருமை பெற்றவர். இன்னொரு மகன் லண்டனிலேயே வளமாக வசித்துவருகின்றார். பெற்ற பிள்ளைகள் அனைத்தும் கற்றகல்வியைக் கொண்டு கண்ணியமான வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்ற நிம்மதியோடு இவ்வுலகிலிருந்து விடைபெற்றுச் சென்று விட்டார். மருமக்களும் பேரப்பிள்ளைகளும் அதிபர்கள், ஆசிரியர்கள், நிறுவன உத்தியோகத்தர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப்பல துறையிலும் செவ்வனே சிறப்பாக சேவையாற்றுவதைக் கண்டு கழித்த இவர். இன்று எம்மோடில்லை.

அவர் கல்விக்காக காட்டிய கரிசனையினால்தான் போலும் அவரின் இறுதிச் சடங்கில் அதிகமான ஆசிரியப் பெருந்தகைகளும், ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்துள்ளார்கள். அவர் எங்களுக்கு மட்டும் அறிவூட்ட வில்லை உற்றார், உறவினர், ஊரார் அனைவருக்கும் ஒரு அன்புள்ள அறிவுத்தாயாக இருந்துள்ளார். அவர் தன் வாழ் நாளில் அடிக்கடி பாவித்த அறிவுத் தொடர்களை இத்துடன் இணைக்கின்றோம். இவ்வறிவுரைகள் நாட்டு வளப்பத்தில் உள்ளவாறே உள்ளது. இலக்கணப்பிழைகள் உடையனவாக இருக்கலாம் ஆனால் இவற்றில் ஒரு அறிவுரை மறைந்திருக்கும். இவ்வறிவுரைகள் எம்மை முழு மனிதராக்க உதவும் என்பது எம் நம்பிக்கை.

**நன்றி**

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுரைகள்

1. தந்தை சொல்மிக்க மந்திரமில்லை.
2. பந்திக்கு முந்து படைக்குப் பிந்து.
3. ஆறிலும் சாவு நூறிலும் சாவு.
4. பாலன் பஞ்சம் பத்து வருசம்.
5. மருந்தும் விருந்தும் மூன்று நாள்.
6. நித்தம் போனால் முற்றம் சலிக்கும்.
7. கல்வியே எமது கண்.
8. களவும் கற்று மற.
9. எண்சாண் உடம்பிற்கும் சிரசே பிரதானம்.
10. துஷ்டனைக் கண்டால் தூரத்தே நில்லு.
11. தர்மம் தலை காக்கும்.
12. குடி குடியைக் கெடுக்கும்.
13. நடுத்துண்டு நமக்கென்றிருக்க வேண்டும்.
14. அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்.
15. காலையும் மாலையும் கடவுளை வணங்கு.
16. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்.
17. வலியச் சண்டைக்கு போகாதோ வந்த சண்டையை விடாதே.
18. பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்.
19. ஆணுக்கொரு நீதி பொண்ணுக்கொரு நீதியென்றில்லை.
20. சுட்டகாலிலே சுடும் பட்டகாலிலே படும்.
21. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
22. நாட்டிற்கும் வீட்டிற்கும் நல்லதையே செய்.
23. கண்கண்டால் கை செய்யவேண்டும்.
24. தலைக்குமேல் வெள்ளம் போனால் சாண் என்ன முழமென்ன.
25. புலி பசித்தாலும் புல்லைத்தின்னாது.
26. முயற்சியுடையான் இகழ்ச்சியடையான்.
27. இடம் கண்டால் மடம் கட்டுவர்.
28. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. காசேதான் கடவுள் கவனமாயிருங்கள்.
30. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்.
31. தானாடாவிட்டாலும் தன் சதையாடும்.
32. துண்டானாலும் துவைச்சுக்கட்டு.
33. கண்டதும் கற்கப் பண்டிதனாவான்.
34. ஆண்டாண்டு அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ.
35. செஞ்சோற்று கடன் செய்துவிடு.
36. செய்யும் தொழிலே தெய்வம்.
37. நம்ப நட நம்பி நடவாதே.
38. கற்றது கைமண்ணளவு கல்லாதது கடலளவு.
39. எம்மதமும் சம்மதம் எல்லோரும் சமம்.
40. ஈட்டி எட்டியவரை பாயும் பணம் பாதாளம் மட்டும் போகும்.
41. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
42. ஊரோடு ஒத்தோடு.
43. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
44. உடையவன் பாரா வேலை ஒரு முழம் கட்டை.
45. ஓடி விளையாடு உண்டபின் உறங்கு.
46. தாயைப்போல் பிள்ளை நூலைப்போல் சேலை.
47. தூரத்துத் தண்ணி ஆபத்துக்குதவாது.
48. ஆலும் வேலும் பல்லுக்குறுதி.
49. ஆனைக்கும் அடிசறுக்கும்.
50. அர்பனுக்குப் பவுசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்.
51. மனை உதவுவது போன்று மக்களும் உதவமாட்டார்.
52. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
53. தனக்கு தனக்கு என்றால் சுளகு படக்குப்படக் கென்றடிக்கும்.
54. உண்டபின் நூறடி உலாத்து.
55. எறும்பூரக் கல்லும் தேயும்.
56. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
57. சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்.
58. வெழுத்ததெல்லாம் பாலல்ல.
59. உழுகிற மாடென்றால் உள்ளூரிலேயே விலைபோகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. அடியாத மாடு படியாது.
61. வெள்ளம் பள்ளம் பார்த்தே பாயும்.
62. பள்ளிப்படிப்பு பாடைவரை உதவும்.
63. மழைக்கால் இருட்டானாலும் மந்தி கொப்பிழகப்பாயாது.
64. சுத்தம் சுகம் தரும்.
65. பணம் பந்தியிலே குணம் குப்பையிலே.
66. சங்கு சுட்டாலும் வெண்மை தரும்.
67. குட்டக்குட்ட குனிபவன் மடையன்.
68. எட்டாப்பழம் புளிக்கும்.
69. முடவன் கொப்பான் தேனுக்கு ஆசைப்படக்கூடாது.
70. சுடச்சுட பொன் ஒளிரும்.
71. வேண்டாப் பண்டம் குப்பையிலே.
72. எள்ளானாலும் ஏளாகப்பிரி.
73. அடி நொச்சி என்றால், நுனி என்ன கரும்பா.
74. துன்பத்தைக் கண்டு துவளாதே.
75. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
76. பேராசை பெரும் தரித்திரம்.
77. கல்லிலே நாருரிக்கமுடியாது.
78. மூச்சுப் போனால் எல்லாம் போச்சு.
79. பல்லுப்போனால் சொல்லுப்போச்சு.
80. அண்ணன் தம்பி மாமன் மச்சான் எல்லாம் சுடலை வரைக்கும் தான்.
81. காலைக் குளிப்பு சாலசசிறந்தது.
82. குழந்தை பிறப்பென்பது தாய்க்கு மறுபிறப்பு.
83. செவிடன் காதில் ஊதிய சங்குபோல்.
84. ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்காது.
85. ஊணன் கருமமிழந்தான் உறங்கியவன் பெண்டிலிழந்தான்.
86. ஆடத்தெரியாதவனுக்கு மேடை சரியில்லை.
87. யானைப்பசிக்கு சோளப்பொரி உதவுமா.
88. அயல் உதவுவது போல் அண்ணன் தம்பி உதவமாட்டார்.
89. கண் கெட்டபின்னே சூரிய நமஸ்காரம் எதற்கு.
90. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. நரித்தனம் புரிந்தால் தரித்திரம் தனே வரும்.
92. ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது.
93. இரு தோணியில் கால் வையாதே.
94. பள்ளம் பார்த்து நட.
95. எலிவளையானாலும் தனிவளை வேண்டும்.
96. தனக்கு கண்டு தானம் வழங்கு.
97. கூழானாலும் குழித்துக் குடி.
98. துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்.
99. கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
100 .தன் கையே தனக்குத் துணை.
101. மந்திரம் கால் மதி முக்கால்
102 ஆழம் அறியாமல் காலை விடாதே.
103 பசுப்பால் ருசிப்பால்(சிறந்தது) புட்டிப்பால்(மா)
பொய்ப்பால்.
104. நாய் வேடம் போட்டால் குலைக்கத்தான் வேண்டும்.
105 .இடியும் மழையும் வானத்தின் கீழ்த்தான்.
106. வலக்கையால் செய்யும் தானம் இடக்கைக்கு
தெரியக் கூடாது.
107. அரனை நம்பி புருசனைக் கைவிடாதே
108. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.
109. கட்டிலும் மெத்தையும் கஸ்டப்பட்டவனுக்கேது.
110. குனியாத வீடு குறைவிலா செல்வம்.
111. கணவனில்லாப் பெண் பல்லில்லாப் பாம்பு.
112. ஒரு பானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம்.
113. ஆற்றில் போட்டாலும் அளந்து போடு.
114. காலைப்படிப்பு சாலச்சிறந்தது.
115. இன சனத்தோடு இசைந்து நட.
116. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
117. பணமில்லாதவன் பிணம்.
118. சோழியன் குடும்பி சும்மா ஆடாது.
119. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு.
120. கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையும்.
121. ஆனை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும்
ஆயிரம் பொன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

122. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது.
123. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சக்கரை.
124. கல்லும் முள்ளும் கஷ்டப்பட்டவனுக்குத்தான்.
125. பாம்புக்கு பாலூட்டாதே.
126. பிள்ளைக்கும் தென்னைக்கும் பேதமில்லை.
127. நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் போகும்.
128. இளம் கன்று பயமறியாது.
129. பிள்ளைச் செல்வம் கொள்ளைப் பலனளிக்கும்.
130. நேரம் பொன்னானது காலம் கடத்தாதே.
131. குச்சு வீட்டில் குடியிருப்பது கஸ்டம்.
132. பிள்ளைப் பாசம் கொள்ளையின்பம்.
133. காலம் பிந்திய கல்வி செல்லாக்காசு
134. அழகுள்ள இடத்திலே ஆபத்திருக்கலாம்.
135. பொம்பிளை சிரிச்சால் போச்சு புகையிலை விரிச்சாப் போச்சு.
136. காவோலை விழ குருத்தோலை சிரிக்குமாம்.
137. பிள்ளைச் செல்வமே பெருஞ்செல்வம்.
138. கொள்ளையாசை தொல்லை தரும்.
139. நித்திரை சத்திராதி ஆனால் நிம்மதியளிக்கும்.
140. அண்ணன் தம்பியுள்ளான் அடிதடிக்கு அஞ்சான்.
141. ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப்பொறுக்க வேண்டும்.
142. பாக்கும் புகையிலையும் பல்லுக்குதவாது.
143. சேற்றில்தான் செந்தாமரை வளர்கிறது.
144. குப்பையிலே கிடந்தாலும் குண்டுமணி மங்காது.
145. வெள்ளை வேட்டிக்காரனை நம்பாதே.
146. மலையோடு தலையை மோதக்கூடாது.
147. அழையா விருந்திற்கு நுழையாதே.
148. பின்னேயென்பதும் பிறகு என்பதும் இல்லை என்பதற்கு சமன்.
149. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா.
150. பிஞ்சில் பழுத்தால் வெம்பல்தான்.
151. செய்ய வேண்டியதை செய்து விடு செத்த பின் செய்யமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

152. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

153. இளமையில் கல்வி சிலையில் எழுத்து.

154. இருந்தவன் எழும்ப முதல் நடந்தவன் முடித்துவிடுவான்.

155. கிட்டாதாயின் வெட்டெனமற.

156. பொய்யும் களவும் வாழ்க்கைக்கு உதவாது.

157. சொல்லும் செயலும் நல்லா இருக்க வேண்டும்.

158. பேயும் இல்லை பிசாசும் இல்லை எல்லாம் எம்மனசுதான்.

159. பொறுமை பொறுமை என்றால் எருமை முதுகில் ஊற்றிய நீர் போல்தான்

160. பசி வந்தால் பத்தும பறக்கும்.

161. ஒழுக்கம் உயிரிலும் உன்னதமானது.

162. கண்ணாடி உடைந்தாலும் காற்றாடி அறுந்தாலும் நமக் உதவாது.

163. நிறைகுடம் தளம்பாது.

164. வாலறுந்த பட்டம் போல் வாழக்கூடாது.

165. வாய்ச்சொல்லை விட்டு செயல்பட்டுக் காட்டு.

166. கோவம் பாவத்தில் முடியலாம்.

167. ஆசைக்கும் அளவுண்டு.

168. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை கூடாது.

169. சிறப்பாக நடந்து கொள் சிரிக்க நடவாதே.

170. பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டலாகாது.

171. தலைவலியும் காச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்.

172. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்.

173. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு

174. தனிமரம் தோப்பாகாது.

175. தன்னைப் புகளாத கம்மாளனில்லை.

176. தாயிற் சிறந்த கோயிலில்லை.

**அறிவுரைகள் நிறைந்ததே அன்னாரின் வாழ்க்கை.**
**இவற்றை போல் இன்னும்பல இருக்கலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரிதை அகவல்

கதிர்காமர் குடும்பத்தின் கடைசி மகனார்
சுப்பிர மணியம் சூடியநல் மனையாள்
பேச்சு முத்தெனும் பேச்சேநல் முத்தாகும்
யார்வீடு வந்தாலும் சிரித்த முகத்தோடு
உபசரித்து வரவேற்று உள்ஊரக் கதைக்கின்ற
பேச்சு முத்து அம்மாவோ பெற்றது
பத்துப்பேர் மொத்தம் ஆண்ஆறு பெண்நாலு
ஆம் அவர்கள் பத்தாம் பிள்ளைகள்
எந்த வறுமையிலும் எடுத்தார் பெருவளர்ச்சி
கல்வியிலும் தொழில்களிலும் கண்டார் நல்வளர்ச்சி
நன்றாய்ப் படித்தவர் நல்லபல வேலைகளில்
ஏனையோர் தொழில்கள் என்றே இயங்கினர்
என்பத்தாறு அப்பர் அவனிடம் சென்றார்
தொண்ணூறு தொடக்கம் நான்கு வருடங்கள்
கிளப்பன் பேக்கில் அகதிகள் வாழ்க்கை
சொல்லவும் முடியாத சங்கடங்கள் நிறைந்தது.
எழுபது சகஒன்றில் இயமனின் விளையாடல்
தர்மராசா தொடக்கம் ரஞ்சிதம் வரையாக
காலனின் விளையாட்டு கலங்கியது குடும்பம்
நிம்மதி என்பது என்னவிலை தெரியாது
இரண்டு பெண்களும் மூன்று ஆண்களும்
உள்ளனர் மிகுதியாய் உலகத்தின் மாறுதல்கள்
பழமொழி அரசியாம் பேச்சு முத்துவும்
பங்குனி இருபத்தேழு பரமனிடம் போனார்
எல்லாம் அவனிடமே எழுத்து மாறிடுமா
நற்கதி அவரடைய நாம்துதிப் போமிங்கே

**- ச.தவராசா-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஆணவம் இல்லாமல் பகுத்தறிவை பயன்படுத்தி நல்லவனாக வாழ்.
* கண்ணிருந்தும் குருடனாக, காதிருந்தும் செவிடனாக,அறிவிருந்தும் மூடனாக வாழாதே.
* கோபம் பொறாமை பேராசை கடுஞ்சொல் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்.

**மனிதனே!**

*உன் சொல்லால் உலகிற்கு வழிகாட்டு*

*உன் நினைவால் உலகிற்கு ஒளியூட்டு*

*உன் செயலால் உலகிற்கு புகழ்கூட்டு*

*உன் பிறப்பை உலகிற்கு பறை சாற்று*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சராசரி ஒருவருக்கான போசணை**

- உடலின் வளர்ச்சிக்கும் நாளாந்த செயற்பாட்டிற்கும் உணவு அவசியம்.
- இதன் அளவும் இதில் அடங்க வேண்டிய கூறுகளும் வயது, பால், உடல்நிலை, தொழில் எனும் பல காரணிகளுக்கு ஏற்ப மாறுபடும்.
- தேவைக்கு அதிகமாகவோ குறைவாகவோ உணவுகளை எடுப்பது ஆரோக்கியமானது அல்ல.
- **காபோவைதரேற்று** அல்லது மாப்பொருள் - சக்தி தரும்.
- **புரதம்** - வளர்ச்சிக்கும், சிதைவடைந்த இழையங்களை புதுப்பிப்பதற்கும் உதவும்.
- **கொழுப்பு** – சக்தியை சேமித்து வைக்க உதவும்.
- **விற்றமின்களும்,** கனியுப்புக்களும் - உடலில் நடைபெறும் பல்வேறுபட்ட தொழிற்பாடுகளில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்கேற்கின்றன.
- நீர் உடல் நிறையின் 60 % ஆகும்.

**ஆகவே ஒருவரது உணவு மேற் குறிப்பிட்ட எல்லாக் கூறுகளையும் கொண்டிருந்தால் சிறந்தது : சோறு/ பாண் + பருப்பு/மாமிசம் + மரக்கறி+ இலைக்கறி+ பழம்.**

**பாலும் முட்டையும் சிறந்த முழு உணவு களாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போசனைக்குறைவுக்கான காரணங்கள் சில

- ❖ போசனை பற்றிய அறிவின்மை.
- ❖ பொருளாதாரக் கஷ்டம்.
- ❖ மூடநம்பிகைகள்.
- ❖ பிழையான சமயல் முறைகள்.
- ❖ சரியான அளவுகளில் உட்கொள்ளாமை.
- ❖ போலி விளம்பரங்களால் ஏமாறுதல்.

## சில போசணைக் குறைவுகளால் ஏற்படும் அறிகுறிகள், நோய்கள்

- காபோவைதரேற்று - வளர்ச்சி குன்றி இருத்தல்.
- புரதம் - குவாசியக்கோர் எனும் குறைபாடும் மூளைவிருத்தி குன்றுதலும்.
- விற்றமின் A - கண், தோல் சம்மந்தப்பட்ட நேய்கள்.
- விற்றமின் B - சோர்வு, உடல் எரிவு, டைவாய்ப்புண, வாய்அவியல்.
- விற்றமின் C - ஸ்கேவி நோய் (முரசிலிருந்து இரத்தம் கசிதல்)
- இரும்புச்சத்து - குருதிச்சோகை.
- அயடீன் - கண்டக்கழலை, பிள்ளைகளின் வளர்ச்சிக்குறைபாடு.
- கல்சியம் - என்புருக்கி நோய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறை அதிகரிப்பதால் ஏற்படும் தீமைகள்

- இருதய நோய்கள்.
- பாரிசவாதம்.
- மூட்டுத்தேய்வு.
- சலரோகம்.
- குடல் புற்று நோய்கள்.
- கருத்தரிக்கும் வாய்ப்பு குறைதல்.
- அழகின்மை.

## தவிர்க்க வேண்டியவை

- அளவுக்கதிகமான கொழுப்பு உணவு.
- அடிக்கடி நொருக்குத்தீன் உண்ணல்.
- அதிக சீனிப் பொருட்கள் உண்ணல்.
- உணவுக்கு ஏற்ற உடலுழைப்பு இன்மை.

**அளவோடு சோறும், இலைக்கறி வகையும், பழங்களும் ஒழுங்கான உடல்பயிற்சியும் அவசியம்.**

## கர்ப்பிணிப் பெண்களுக்கான போசனை

- முன்னர் உட்கொண்ட உணவை விட அதிகம் உண்ண வேண்டும்
- அதிக புரதம், காபோவைதரேற்று, கனியுப்புகள் நிறைந்த உணவு சிறந்தது.
- பால், முட்டை பருப்பு மீன், இறைச்சி பழம் சிறந்தது
- மாதம் இருமுறை கிளினிக் சென்று ஆலோசனை பெற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்ப்பாலூட்டும் பெண்களுக்கான போசணை

அதிகளவு போசணையுள்ள உணவு பாலூட்டும் தாய்க்கு மிக அவசியம்
ஏனெனில்

- தாய் தனது உடலுக்கான போசணையைப் பெற வேண்டும்.
- கர்ப்ப காலத்தில் இழந்த தனது உடலின் போசணை சேமிப்புக்களை மீள் சீர்படுத்த வேண்டும்.
- தனது குழந்தைக்கான போசணையைப் பெற வேண்டும்.
- தாய்ப்பாலில் அதிகளவு போசணை இழக்கப்படுவதால் தாய்க்கு மேலதிக உணவு தேவை.
- கர்ப்ப காலத்தில் உட்கொள்வதை விட அதிகம் உணவு உண்ண வேண்டும்.
- அத்துடன் அதிகளவு நீராகாரம் உட்கொள்ள வேண்டும்.
- இழந்த குருதிக்கும் இழந்து கொண்டிருக்கும் பாலின் அளவிற்கும் ஏற்ப நீராகாரம் எடுக்காவிடில் பாரதுரமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.
- தாய் அதிகம் தண்ணீர் குடிப்பதால் வயிறு நிரந்தரமாகப் பருமனடையாது.
- சிசேரியன் சத்திர சிகிச்சை செய்த தாய் அதிகம் நீர் குடித்தால் புண் சிதல் பிடிக்கும் என்பது தவறு.

**குழந்தைகளுக்கு தாய்ப்பாலைப் போல் மிகச்சிறந்த உணவு இவ்வுலகில் வேறெதுவும் இல்லை.**
**குழந்தைகளுக்கேயுரிய தாய்ப்பாலை நிறுத்துவது பெருந்துரோகமாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசநோய்

❖ காச நோயை (TB) குணப்படுத்த முடியும் வைத்தியர் ஆலோசனைப்படி தொடர்ந்து சிறிது காலம் குளிசை குடிக்க வேண்டும்.

## மலேரியா

❖ பெரியம்மை, போலியோ போன்ற நோய்களை இல்லாதொழித்தது போன்று இலங்கையிலிருந்து மலேரியாவை இல்லாதொழிக்க நாம் ஒவ்வொருவரும் உதவவேண்டும். இதற்காக நுளம்பு உண்டாகும் இடங்களை இல்லாதொழிப்போம். இரத்தப் பரிசோதனையும் செய்துகொள்வோம்.

## எயிட்ஸ்

❖ ஒருவனுக்கு ஒருத்தியாக வாழ்ந்தால் ஒருபோதும் இல்லை எயிட்ஸ்

- அதிகமாக தவறான உடலுறவு மூலமே தொற்றுகிறது.
- தாயிலிருந்தால் (HIV) குழந்தைக்கு தொற்றலாம்.
- ஒருவருடைய இரத்தத்திலிருந்தால் (HIV), இரத்தப் பரிமாற்றம் மூலம் அல்லது பாவிக்கும் ஊசிகள் மூலம் தொற்றலாம்.

தொட்டால் தொற்றாது. எனவே எயிட்ஸ் தடுப்பிற்குதவுவோம்.

HIV எயிட்ஸை கட்டுப்படுத்த கதைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு

25 - 06 - 1930



மறைவு

11 - 04 - 2011

ஈச்சந்தீவை பிறப்பிடமாகவும் 202/9J லேவன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். திருமதி.சுப்பிரமணியம் பேச்சு முத்து

### அவர்கள் 11.04.2011 திங்கட்கிழமை அன்று காலமானார்

அன்னார் காலஞ்சென்ற க.சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், திரு.சு.தங்கத்துரை (ஓய்வு பெற்ற P.H.I) திருமதி.மு.புஸ்பவதி சு.இராமலிங்கம், மோகனசுந்தரம் (லண்டன்), வதா(ஆசிரியை புனித மரியாள் கல்லூரி) மறைந்த சு.தர்மராசா, செல்வராசா, திருஞானம், இன்பமலர், ரஞ்சிதம் ஆகியோரின் தாயாரும், ஜெயலட்சுமி, முருகேசு, புவனேஸ்வரி, தயாழினி (லண்டன்), திரு.கோ.செல்வநாயகம் (அதிபர், தி/விபுலாநந்தா கல்லூரி) கௌரிமாலா, ஆசிரியை(தி/கோபாலபுரம் தமிழ் வித்தியாலயம் (காலஞ்சென்ற து.நித்தியானந்தம்), து.கருணானந்தம் (துறைமுக அதிகார சபை) ஆகியோரின் மாமியாரும், த.நிமலராசா, சிந்துஜா, நிமலினி, சிவலோஜிதன்(திட்ட முகாமையாளர் செடோட்), நிசாந்தினி (சிறுவர் நன்நடத்தை திணைக்களம், ரகுமணிவண்ணன் (வெளிக்கள உத்தியோகத்தர் G.M.C.I.) . மகேஸ்வரன் (பொலிஸ் உத்தியோகத்தர்), வதனா (தி/அல்மின் காஜ் மு.வித்), (காலஞ்சென்ற அமுதமலர்), இன்ப மலர் (ஆசிரியை ஈச்சந்தீவு தமிழ் வித்தியாலயம்), காளிராசா (அதிபர் தி/ பாரதி தமிழ் வித்தியாலம்), கமலேந்திரன் (பிரான்ஸ்), தவனேஸ்வரி, கருணாமலர், மோகனேந்திரன்(ஆசிரியர் ஆலங்கேணி வி.ம.வித்), கயல் அரசி, கஜேந்திரன் (பிரதி மாவட்ட இணைப்பாளர் இ.அபிவிருந்தி அகம் . ஆனந்தி(கணக்கு எழுதுவினைஞர்) லோஜினி, சுதாகரன்(கிராம உத்தியோகத்தர்), சுரேஸ் (ஈரோசியன் Restaurant உரிமையாளர்) சுதாஜினி (ஆசிரியை தி/முகமதியா வித்தியாலயம்) பிரியந்தினி, தனிதன்(கனடா), சுதன்(லண்டன்), தமிழினி (லண்டன்), குகராஜ், இந்துமதி (ஆசிரியை தி/அதி கோணேஸ்வரா ம.வி), திபாஜினி, சசிகுமார், பேரின்பராஜ், தர்மினி, திருமூர்த்தி, தனுசன், சாருகா, தட்சயன், விதுசா ஆகியோரின் பேத்தியும், சத்துகன், ஐதுசன், டிலக்சன், தோகர்ஷினி, துவாரகா, துவாரகன், தனுராஜ், திவக்சனா, மதுதன், காயத்திரி, தமிழினி, பூஜைசன், (காலஞ்சென்ற பகலவன்), நதுஜா, இனியவன், சதுர்ஷினி, தக்சிகன், லக்ஷைவன், அக்ஷயன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று 11.04.2011 மாலை 4 மணிக்கு இல 202/9J லேவன் வீதி உவர்மலை இல்லத்திலிருந்து திருகோணமலை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும்
ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
25.06.1930

உதிர்வு
11.04.2011

## திருமதி. சுப்பிரமணியம் பேச்சுமுத்து

ஈச்சந்தீவு கிராம மதில்
இனிதாய் இல்லறத்தாயாக வாழ்ந்து
நன் மக்களைப் பெற்று
கற்றவர்களாக்கி புகழுடன் வாழ
வழி செய்த அன்னார் - என்றும்
இன்முகம் காட்டி வரவேற்று
உணவழித்து உபசரித்து
சமூகம் சார்ந்து வாழ்ந்து
சலிப்பில்லாத கடமைகள் செய்து
இனிய இளையமகள் லதா செல்வநாயகத்துடன்
இறுதிவரை வாழ்ந்து மகிழ்ந்து
இறையடி சேர்ந்தீரே
வாழ்வதும் மடிவதும் வாழ்வியல் உண்மை
மரணம் ஒருநாள் காவு கொண்டினும்
வாழ்ந்த சிறப்பு என்றும் நிலைக்கும்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசார ஊழியர்கள்
தி/விபுலானந்தா கல்லூரி
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்


அன்பான உற்றார், உறவினர், அயலவர், ஆசிரியப் பெருந்தகைகள், அறிந்தோர் தெரிந்தோர் என பல வகையிலும் அன்னாரது மரணச்சடங்குகளில் பங்கு பற்றி உதவி ஒத்தாசை புரிந்த எல்லோருக்கும் எங்கள் பெரு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். வசிப்பிடம் ஈச்சந்தீவிலிருந்து பற்பல கஷ்டத்திற்கு மத்தியிலும் வந்து கலந்து கொண்ட அனைவருக்கும் எங்கள் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். தொலைவிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எங்கள் நன்றி. ஓடியாடி உதவிகள் புரிந்தோருக்கும் உணவளித்துக் கௌரவித்த எல்லோருக்கும் எங்கள் நன்றி. அஞ்சலிப் பதாதைகள் கட்டியும் அச்சிட்டும் கௌரவப் படுத்தியவர்கட்கும் எமது உளமார்ந்த நன்றி. இந்த நினைவு மலர் வெளியீட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கும் உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்கள் நன்றி.

**நன்றி நன்றி நன்றி.**

இவ்வண்ணம்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 202/9J, கீழ் வீதி,
உவர்மலை, திருகோணமலை.
தொ.பே எண் :- 0262220542.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும்தெய்வத்துள் வைக்கப் படுவார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா

கதிர்காமத்தம்பி + சவுந்தரிப்பிள்ளை
(தாமரைவில்லு)

1. செல்லத்தம்பி (தாமரைவில்லு)
2. பொன்னையா (உப்பாறு)
3. பாக்கியம் (ஈச்சந்தீவு)
4. நாகம்மா (கந்தளாய்)
5. செல்லம்மா (மூதூர்)
6. முத்துப் (ஈச்சந்
7. வள்ளிநாயகம் (மூதூர்)
8. பெரியபிள்ளை (மூதூர்)
9. கார்த்திகேசு (ஈச்சந்தீவு)
10. வைரமுத்து (ஈச்சந்தீவு)
**11. சுப்பிரமணி**

1. தங்கத்துரை + ஜெயலெட்சுமி
   - 1. நிமலராசா + சிந்துஜா
   - 2. நிமலினி சிவலோகிதன்
     - சத்ருகன்
     - யதுர்ஷன்
     - டிலக்ஷன்
   - 3. டிலானி + ரகுமணிவண்ணன்
     - தோஹர்ஷினி

2. புஸ்பவதி + முருகேசு
   - 1. மகேஸ்வரன் + வதனா
     - துவாரகா
     - துவாரகன்
   - 2. அமுதமலர்
   - 3. இன்பமலர் காளிராசா
     - தனுராஜ்
     - திலக்சனா
     - மருதன்
   - 4. கமலேந்திரன் + தவனேஸ்வரி
     - காயத்திரி
     - தமிழினி
     - பகலவன்
     - பூவரசன்
   - 5. சுகுணாமலர்
   - 6. மோகனேந்திரன் + கயலரசி
     - நதுஷா
   - 7. கஜேந்திரன் + ஆனந்தி
     - இனியவன்

3. தர்மராசா

4. இராமலிங்கம் + புவனேஸ்வரி
   - 1 லோஜினி + சுதாகரன்
     - தக்ஷிகன்
   - 2. சுரேஸ்
   - 3. சுதாஜினி

5. செல்வராசா + கௌரிமலா
   - 1. பிரியந்தினி
   - 2. தனிதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவழி

முருகப்பா + சந்தானம்
(உப்பாறு)

6. முத்துப்பிள்ளை
(ஈச்சந்தீவு)

1. தங்கமுத்து
(சம்பூர்)

2. ஆச்சி முத்து
(சம்பூர்)

3. இராசம்மா
(ஆலங்கேணி)

ப்பிரமணியம்

4. கோணாமலை
(உப்பாறு)
(ஆலங்கேணி)

5. கந்தையா
(உப்பாறு)

**6. பேச்சுமுத்து**

ல்வராசா
+
ரிமலா

ந்தினி

ன்

6. இன்பமலர்
+
நித்தியானந்தன்

1. குகராஜ்
இந்துமதி

2. தீபாஜினி
+
சசிகுமார்

சதுர்சினி
லக்ஷனன்

3. பேரின்பராஜ்

7. மோகனசுந்தரம்
+
தயாளினி

1. சுதன்

2. சாளினி

8. ரஞ்சிதம்
+
கருணானந்தம்

1. தர்மினி
திருமூர்தி

அக்ஷயன்

2. தனுசன்
+
சிவப்பிரியா

9. திருஞானம்

10. லதா
+
செல்வநாயகம்

1. சாருகா

2. தட்ஷயன்
3. விதுஷிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேற்றப்பா

இலையுதிர்ந்தால் உயிர்ப்பதில்லை
இறந்த உடல் நடப்பதில்லை
மலர் கருகி வீழ்ந்த பின்னர் மணப்பதில்லை - நிலையில்லா
உலகில் வரும் உருவமெல்லாம் ஒரு நாள் போயொழியும்
ஆலகிலன் தாள்பணிவோம் சிறந்து

இந்த நினைவு மலர் வெளியீட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட
உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்கள் நன்றி

நன்றி நன்றி நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org